IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS

(As per XXIII case of Criminal procedure)

SESSIONS CASE NO. 42/2024

Deposition of witness for prosecution : PW9

Defense :

Name : கிருஷ்ணமூர்த்தி

Father's Name : தாண்டவராயன்

Village :

Taluk : செங்கம்

Caste :

Calling : உதவி ஆய்வாளர் (ஓய்வு)

Religion :

Age : 60

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.02.2026.

**முதல் விசாரணை**

**எதிரி ஆஜர்.**

1. நான் செய்யாறு காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து 31.01.2026 ல் ஓய்வு பெற்றேன். 20.03.2021ல் நான் ஆரணி நகர காவல் நிலையத்தில் உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது ஆரணி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் 16 மணி அளவில் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த பூங்காவனத்திடம் புகார் வாக்குமூலம் பெற்றேன். பின்பு நிலையம் சென்று ஆரணி நகர காவல் நிலைய குற்ற எண்.146/2021 பிரிவு 294பி, 324, 307, 506(2) இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.**10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

1. நான் பதிவு செய்த புகார் வாக்குமூலத்தில் கடைசி வரியில் படித்து காண்பித்தில் நான் சொன்னது சரியாக உள்ளது என்று வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் அந்த நேரத்தில் மை தீர்ந்துவிட்டதால் வேறு பேனாவில் எழுதினேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எழுதியதும் புகார் வாக்குமூலத்தில் மேலொப்பம் செய்ததும் வேறு வேறு நபர் தான் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை யார் பெற்றது என்றால் காவல் நிலையத்தில் பாரா பார்த்த நபர் பெற்றார்.

2. நான் சொன்னது போல் மருத்துவமனையில் இருந்து தகவல் எதுவும் வரவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் பெற்றதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றாலும் சரியல்ல. புகார் வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வெள்ளை தாளில் கையொப்பம் மட்டும் வாங்கிகொண்டு விவரங்களை நானே எழுதி கொண்டேன் என்றால் சரியல்ல. மேலதிகாரிகள் அழுத்தம் காரணமாக இந்த வழக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.